3rd November 1966]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) According to the provisions of the scheme governing the temple, there should be four trustees for this temple;

(*b*) The four trustees are to be appointed on the basis of nominations made, as per usage, by the sixty 'pangalis' or shareholders of Kurangani village;

(*c*) Yes. In addition to the four trustees who have been appointed by the Area Committee, on the basis of nomination by the sixty pangalis, one more trustee by name Sri P. Duraiswamy has also been appointed by the Area Committee, in its resolution No. 88, dated 31st January 1964, making the total number of trustees five;

(*d*) Clause 3 of the Scheme restricting the number of trustees to four is inconsistent with the provisions of the Act which enables the competent authority to appoint 5 trustees. A fifth trustee has accordingly been appointed by the Area Committee according to section 118 (2) (b) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959.

1967 பொதுத் தேர்தல்கள்

** 346 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--*

(அ) தமிழக அமைச்சர்களுக்கு தேர்தல் நிதி வசூலிக்கும் போது போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆமென்றால், அதன் விவரமென்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) It is the normal function of the Police to provide protection to Ministers at all times.

திரு. கரு. சீமைச்சாமி : தேர்தல் நிதி திரட்ட அமைச்சர் வருகிறார், அமைச்சர் வருகிறார் என்று பொதுமக்கள் சொல்லுகிறார்கள். அமைச்சர்கள் வரும்போது அவர்களுடன் அதிகாரிகளும் வருகிறார்கள். அமைச்சர்கள் இப்படி நிதி திரட்டுவது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வது ஆகாதா ? பதவியை ராஜினாமா செய்துவிட்டு பிறகு நிதி திரட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்தல் நிதி திரட்டுவது என்பது ஒன்று ; அமைச்சர்களுக்குப் பாதுகாப்பு என்பது வேறு விஷயம். இதிலே துஷ்பிரயோகம் ஒன்றும் இல்லை.

திரு. செ. மாதவன் : அமைச்சர்கள், அமைச்சர்கள் என்ற ஹோதாவில் சென்றால் பாதுகாப்பு கொடுக்கலாம். ஆனால் அவர்கள் தனிப்பட்ட கட்சிக்காக அவர்கள் வீதிதோறும் உண்டியல் ஏந்தி செல்லுவது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அமைச்சர்களுக்கு மட்டும் அல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருகிறது.